IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No.34/2013**

| DEPOSITION OF WITNESS | DW.4 |
|---|---|

| NAME | சுரேஷ் குமார் |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 14.07.2023

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் தற்போது ராஜக்கல் கிராமத்தில் கிராம உதவியாளராக 10 ஆண்டுகளாக பணியாற்றி வருகிறேன். அதற்கு முன்பு குடியாத்தத்தில் பைனான்ஸ் நிறுவனத்தில் பணிறாற்றி வந்தேன். டி.டி.மோட்டூர் எனது சொந்த ஊர் அங்கு நான் பணியாற்ற வில்லை.

2.எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணை வந்த பிறகு நேரடியாக நீதிமன்றத்திற்கு தான் வந்தேன் யாரையும் பார்க்கவில்லை.

3.தாராபாய் ஜெயகுமாருக்கு பவர் எழுதிக் கொடுத்த ஆவணம் சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சர்வே எண்.186/4, சர்வே எண்.186/2 எ 93 அதற்கு உண்டான விஸ்தீரணம் 1.77 மற்றும் 1.32 ஆகும்.

4.நான் பிறந்ததிலிருந்தே டி.டி. மோட்டூர் கிராமத்தில் தான் வசித்து வருகிறேன். அந்த சொத்து யார் வாங்கினார் யாருக்கு விற்றார் என்ற விவரம் தெரியும். சொத்தின் அனைத்து பரிமாற்றங்களும் எனக்கு தெரியும்.

5.தாராபாய் ஜெயகுமாருக்கு பவர் எழுதிக் கொடுத்ததற்காக எவ்வளவு பணம் கொடுத்தார் என்ற விவரம் தெரியாது. தாராபாய் வயதானவர் என்பதற்காக அவரது மகன் பெங்களூரில் இருப்பதால் ஜெயகுமாருக்கு நிலத்தை விற்பனை செய்வதற்காக பவர் கொடுக்கப்பட்டது.

6.தாராபாய்க்கு நிலம் எப்படி வந்தது என்ற விவரம் தெரியும். தாராபாய் சொபத்து யார் யாருக்கு விற்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். வா.சா.ஆ.4 பவர் பத்திரம் பேர்ணாம்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் தயார் செய்து கையொப்பம் இடப்பட்டது. வா.சா.ஆ.4 ஆவண எழுத்தாளரால் தயார் செய்யப்பட்டது.

7.நான் டி.டி. மோட்டூரில் கிராம உதவியாளராக பணியாற்றியதால் அந்த பவர் பத்திரித்தை ஏற்படுத்திய பிறகு வருவாய் ஆவணங்களை தனது அதிகாரத்தை பயனன்படுத்தி தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாராபாய்க்கு சொத்து கீதாவிடமிருந்து கிடைக்கப்பெற்றது.

8.கீதா வாதி தரணியம்மாளுக்கு சகோதரி ஆவார். தரணியம்மாளுக்கு 1996 ஆம்

ஆண்டு எனது தாத்தா 25 செண்ட் நிலத்தை எழுதி வைத்தார் என்றால் இல்லை.

9.பவர் எழுதுவதற்கு முன்பே எனது தாத்தா தரணியம்மாளுக்கு எழுதி வைத்த ஆவணத்தை பற்றி தெரியும் என்றாலும் நான் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.